ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1420/5 - 2005 නොවැම්බර් 21 වැනි සඳුදා - 2005.11.21

1420/5 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 11/80 (II)*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார, போஷாக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ச அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நிமல் சிறிபால த சில்வா,
சுகாதார, போஷாக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ச
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு 1,
2005, நவெம்பர் 15.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் உணவு (கதிர் ஒளிவூட்டல்) ஒழுங்கு விதிகள் 2005 என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அவை 2006 ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி அன்று நடைமுறைக்கு, வருதலும் வேண்டும்.

பாகம் I

*பொது ஏற்பாடுகள்*

2. இவ்வொழுங்குவிதிகள்ன் ஏற்பாடுகள்–

(அ) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வோர் உணவு கதிர் ஒளிவூட்டல் வசதிக்கும் ;

(ஆ) உணவுகள் உள்ளூர் நுகர்வுக்கு உற்பத்தி செய்யப்படினும்சரி அல்லது ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படினும்சரி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கதிர்ஒளியூட்டப்பட்ட எல்லா உணவுகளுக்கும் ;

(இ) இறக்குமதி செய்யப்பட்ட உணவுகள் எல்லாவற்றிற்கும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் மற்றும் சுற்றாடலுக்கும் தேவையற்ற ஆபத்தின்றி உணவுகளுக்கு கதிர் ஒளிவூட்டலின் தேவைப்பாடுகள் எய்தப்படுவதை உறுதிப்படுத்துவதாகும். இந்த நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இவ் ஒழுங்குவிதிகள்–

(அ) உணவில் நோயைத் தோற்றுவிக்கும் நுண்ணங்கிகளையும், ஒட்டுண்ணிகளையும் கட்டுப்படுத்துமாறும் ;

(ஆ) பூச்சிகளாலும், நுண்ணுயிர்களாலும் மற்றும் பௌதீகச் செய்முறைகளினாலும் ஏற்படுத்தப்படும் அறுவடைக்குப் பின்னரான உணவுப் பொருட்களின் இழப்பைக் குறைக்குமாறும் ;–

(இ) வியாபாரம் தொடர்பில் தொற்றுத்தடைக் காப்பிற்கென தனிப்படுத்திவைக்கும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுமாறும் ;

(ஈ) உணவின் சந்தைப்படுத்தக்கூடிய தன்மையை நீடிக்குமாறும் ; அத்துடன்

(உ) உணவுகளுக்குக் கதிர் ஒளியூட்டும் வசதிகளின் பாதுகாப்பான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துமாறும்,

தேவைப்படுத்துகின்றன.

4. (1) அத்தகைய உணவு கதிர் ஒளியூட்டலிலிருந்து நன்மை பெறக்கூடியதான ஒரு சிறந்த உற்பத்தி நடைமுறையைப் பயன்படுத்தி உணவுக் கதிர் ஒளியூட்டலுக்கான தகைமைவாய்ந்த தேசிய அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும் மற்றும் உரிமமளிக்கப்பட்டதுமான அல்லது அதிகாரமளிக்கப்பட்டதான ஓர் உணவுக் கதிர் ஒளியூட்டல் வசதி ஒன்றில் தவிர, உணவு எதுவும் கதிர் ஒளியூட்டும் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்படுதல் ஆகாது.

(2) ஏதேனும் உணவின் அயனாக்கும் கதிர் வீச்சு மூலமான பதப்படுத்தலானது இவ் ஒழுங்குவிதிகளின் பாகம் II இன் ஏற்பாடுகளுக்கு அமையவும் மற்றும் அத்தகைய உணவின் வகை தொடர்பில் வழங்கப்பட்ட உரிமத்திற்கு இணங்கியொழுகவும் செய்யப்படுதல் வேண்டும்.

5. உற்பத்தி செய்யப்படும் உணவானது, 1989 ஆம் ஆண்டு யூன் 2 ஆந் தேதிய 560/ 13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உணவு ஒழுங்குவிதிகள் 1988 இனால் விதித்துரைக்கப்பட்டவாறான தரம் மற்றும் சுகாதாரம் பற்றிய பொதுவான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகினாலன்றி, உணவெதுவும் அயனாக்கும் கதிர் ஒளியூட்டலினால் பதப்படுத்தப்படுதல் ஆகாது.

6. ஏதேனும் உணவின்மீது கதிர் ஒளியேற்றலின் அளவானது குறைந்தபட்சம் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்தை எய்துவதற்குத் தேவையான ஆகக்குறைந்த மட்ட அளவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், உணவின் தரத்தைப் பாதிக்காத அதிகபட்ச அளவுக்கான மட்டத்தை விஞ்சுவதாக இருத்தலுமாகாது.

7. கதிர் ஒளியூட்டப்பட்ட உணவைப்பொதி செய்யப்பயன்படுத்தப்படும் பொருட்கள் கதிர் ஒளியூட்டலுக்குப் பொருத்தமானவையானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் மீண்டும் நோய் தொற்றுவதையும், மீண்டும் மாசடைவதையும் தடுப்பதற்குப் போதியதாகவிருந்தலும் வேண்டும். அத்தகைய பொதிசெய்யும் பொருளானது கதிர் ஒளியூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து, விநியோகம் மற்றும் விற்பனைக்கான முன்வைத்தல் போன்றவற்றின்போது அவற்றின் கூறுபடா நிலையைப் பேணக்கூடியதாகவிருத்தலும் வேண்டும்.

8. ஆளெவரும் அயனாக்கும் கதிர்வீச்சினால் பதப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட ஏதேனும் உணவை அல்லது அத்தகைய உணவின் ஏதேனும் பாகத்தை-

(அ) அவ்வுணவுத்தொடர்பில், கதிர் ஒளியூட்டல் உரிமத்தின் தேவைப்பாட்டிற்கிணங்க பதப்படுத்துதலானது இலங்கையில் அயனாக்கும் கதிர் வீச்சுக்கொண்டு செய்யப்பட்டிருந்தாலன்றி ;

(ஆ) அவ் உணவு, இவ்வொழுங்கு விதிகளின் பாகம் VII இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக இறக்குமதி செய்யப்பட்டாலன்றி ; அல்லது

(இ) அவ்வுணவு இவ்வொழுங்கு விதிகளின் பாகம் V இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு சுட்டுத்துண்டிடப்பட்டிருந்தாலன்றி, விற்பனை செய்தலோ களஞ்சியப்படுத்தலோ விற்பனைக்காக கொண்டுசெல்லுதலோ அல்லது விற்பனைக்காக முன்வைத்தலோ ஆகாது.

## பாகம் II

### *அயனாக்கும் கதிர்விச்சு மூலம் உணவைப் பதப்படுத்துதல்*

9. ஓர் உணவு கதிர் ஒளியூட்டும் வசதியாலும், அளவியலாலும் இணங்கியொழுகப்படவேண்டிய நிபந்தனைகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) அயனாக்கும் கதிர்வீச்சு பயன்படுத்தப்படுமிடத்து, உணவுக்கதிர் ஒளியூட்டும் வசதிகள் வேலையாட்களினதும், பொது மக்களினதும் மற்றும் சூழலினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) கதிர் ஒளியூட்டலின் மூலம் உணவைப பதப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கதிர் ஒளியூட்டல் வசதிகள் நாட்டின் சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கியொழுகுவனவாகவிருத்தல் வேண்டும் ;

(இ) கதிர் ஒளியூட்டும் வசதிகள், அவசியமான காப்பு நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் செய்முறைகள் பற்றிய சரியான பதிவேடுகளைப் பேணுதல் உட்பட, தேசிய மற்றும் சர்வதேசரீதியில் பின்பற்றப்படும் தாபிக்கப்பட்ட சிறந்த கதிர் ஒளியூட்டல் நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபையினால் பரிசீலனை செய்யப்படுத்தல் வேண்டும்.

(ஈ) கதிர் ஒளியூட்டல் அளவியலானது ஒரு தர உறுதிப்பாடும் முறைமையின் பகுதியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச நடைமுறைகளுக்கு இசைவானதாகவிருத்தலும் வேண்டும்.

(உ) கதிர் ஒளியூட்டல் வசதிகள், உணவின் கதிர் ஒளியூட்டலுக்குத் தகுதி வாய்ந்த அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ள பயிற்றப்பட்ட தகுதிவாய்ந்த ஆளணியினரால் தொழிற்படுத்தப்படுதலும் கட்டுப்படுத்தலும் வேண்டும் ;

(ஊ) உணவுக் கதிர் ஒளியூட்டல் வசதியானது, காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடியதான அணுசக்தி அதிகாரசபையின் கதிர்வீச்சுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(எ) ஏதேனும் உணவுக் கதிர் ஒளியூட்டல் வசதியின் இயக்குவோரும் அல்லது தரக்கட்டுப்பாட்டு ஆளணியினரும் கதிர் ஒளியூட்டல் அளவியலை கீழே விவரிக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளுதல் வேண்டும் :-

(i) பதப்படுத்தப்பட்ட உணவில் உள்ளுறிஞ்சப்பட்ட கதிர்ஒளியின் அளவையும் அதன் பகிர்வையும் கிரமமாக அளவீடு செய்தல் வேண்டும் ;

(ii) கதிர் ஒளியூட்டல் வசதியில் கிரமமாகப் பயன்படுத்தப்படும் அளவீட்டு மற்றும் கண்காணித்தல் உபாயங்களின் பெறுபேறுகளை அளவையிடுவதற்கெனச் செம்மையான குறிப்பீட்டு அளவைகளைப் பேணுதல் அவற்றுக்கான உடனடி அணுக்கத்தை உறுதிப்படுத்தலும் வேண்டும் ;

(iii) நுணுக்கமான, இயைபான அத்துடன் திறனுள்ள கதிர் ஒளியூட்டல் அளவையினால் கண்காணிப்பை வழங்குவதற்காக விதித்துரைக்கப்பட்ட அளவையியல் தெரிவு உரைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(iv) கதிர் ஒளியூட்டல் அளவையியல் நடைமுறையின் அனைத்துக் கட்டங்களிலும் செம்மையான கதிர் ஒளியூட்டல் அளவையியல் பதிவேடுகளை வைத்திருத்தலும், பேணுதலும் மற்றும் செவ்வை பார்க்கும் நிரல்களைப் பயன்படுத்தலும் வேண்டும்.

## பாகம் III

### *உணவுகளுக்கான கதிர் ஒளியூட்டல் மீதான கட்டுப்பாடு*

10. (1) இலங்கையில் தாபிக்கப்பட்ட கதிர் ஒளியூட்டும் வசதிகள் சுயேச்சையான வெளிப்புறக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதில் உதவுவதற்காக ஆவணப்படுத்தப்பட்ட தரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(2) கதிர் ஒளியூட்டப்படவுள்ள உணவும் அவற்றின் பொதி செய்யும் பொருட்களும் பொருத்தமான தரமுடையனவாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்க சுகாதார நிலைமையினவாகவும் மற்றும் இந்நோக்கத்திற்குப் போதுமானவையாகவும் இருத்தல் வேண்டும் ;

(3) அயனாக்கும் கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்படும் எல்லா உணவு உற்பத்திப் பொருட்கள், கதிர் ஒளியூட்டலுக்கு முன்னரும், கதிர் ஒளியூட்டலின்போதும் மற்றும் அதன் பின்னரும் பதப்படுத்துதலின் குறிப்பிட்ட தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த உற்பத்தி நடைமுறைகளின்படி கையாளப்படுதல் வேண்டும்.

(4) உள்வரும் உணவு உற்பத்திப் பொருட்கள் வெளிச்செல்லும் கதிர் ஒளியூட்டலுக்குட்படுத்தப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்களிலிருந்து தனிவேறாக்கப்படுதல் வேண்டும். தோதானவிடத்து கதிர் ஒளியூட்டப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்களையும் கதிர் ஒளியூட்டப்படாத உணவு உற்பத்திப் பொருட்களையும் உடனும் இனம்கண்டு கொள்வதற்கு வசதியாக பொதி ஒவ்வொன்றினது வெளிப்புறத்திலும் கண்ணுக்குக் புலப்படக்கூடிய நிறமாற்றமடையும் கதிர்வீச்சுச் சுட்டி ஒட்டப்படுதல் வேண்டும்.

(5) கதிர் ஒளியூட்டலானது, தகுந்த அளவையியல் நடவடிக்கைமுறை உட்பட, உணவு கதிர் ஒளியூட்டல் மீதான சர்வதேச ஆலோசனைக் குழுவினால் (ஐ. சி. ஜி. எவ். ஐ.) விதந்துரைக்கப்பட்டவாறு சிறந்த கதிர் ஒளியூட்டல் நடைமுறைகளுக்கிசைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அளவையியலானது, ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய சர்வதேசத் தராதரங்களுடையதாக இருத்தல் வேண்டும் ;

(6) கதிர் ஒளியூட்டும் வசதிகள், கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்பட்ட உணவுத் தொகுதி ஒவ்வொன்றினதும் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும். அத்தகைய பதிவேடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) தொகுதியின் தொடரிலக்கம் ;

(ஆ) கதிர் ஒளியூட்டல் மேற்கொள்ளப்பட்ட திகதி ;

(இ) கதிர் ஒளியூட்டப்பட்ட உணவுத் தொகுதியின் வகையும் மற்றும் அளவும் ;

(ஈ) தோதானவிடத்து, கதிர் ஒளியூட்டல் பதப்படுத்துதலின் போது பயன்படுத்தப்பட்ட பொதி செய்யும் பொருளின் வகை ;

(உ) பதப்படுத்துதலின்போது, குறிப்பாக உள்ளுறிஞ்சப்பட்ட குறைந்தபட்ச மற்றும் அதிகப்பட்ச அளவுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட அனைத்துக் கட்டுப்பாடுகளும் அளவீடுகளும்

(ஊ) கதிர் ஒளியூட்டல் பதப்படுத்தலின்போது அவதானிக்கப்பட்ட எவையேனும் சம்பவங்கள் அல்லது மாறுபாடுகள்.

(7) பந்தி (6) இன்கீழ்ப் பேணப்பட்ட பதிவேடுகள், கதிர் ஒளியூட்டல், வசதியால் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்காவது வைத்திருக்கப்படுதல் வேண்டும். அத்துடன் வசதி மூடப்படும் பட்சத்தில் உரிமமளிக்கும் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(8) கதிர் ஒளியூட்டல், வசதிகள் ஆண்டுதோறும் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் எழுத்திலான அறிக்கையொன்றைக் தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) உணவு கதிர் ஒளியூட்டல் வசதியின் பெயர் ;

(ஆ) அறிக்கை தொடர்புறுத்தும் காலப்பகுதி ;

(இ) அத்தகைய காலப்பகுதியின்போது அயனாக்கும் கதிர்வீச்சின் மூலம் பதப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட உணவுப் பொருள் ஒவ்வொன்றினதும் விவரணம் ;

(ஈ) அத்தகைய காலப்பகுதியின்போது அயனாக்கும் கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட உணவுப் பொருள் ஒவ்வொன்றினதும், கனஅளவு ரீதியில் அல்லது நிறை ரீதியில் ஆன அளவு ;

(9) தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபையானது இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை வலுவுக்கிடுதல் வேண்டும். என்பதுடன், குறைந்தவட்சம் ஆண்டிற்கொரு முறையாவது கிரமமான பரிசோதனையை மேற்கொள்ளுதலும் வேண்டும் ;

(10) இவ்வொழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒவ்வொருவரும், உணவின் கதிர் ஒளியூட்டலலுக்குப் பயன்படுத்தப்படும் அல்லது அயனாக்கும் கதிர் வீச்சு மூலம் பதப்படுத்தப்பட்ட அல்லது பதப்படுத்தப்படவுள்ள உணவைக் களஞ்சியப்படுததுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடத்தைச் சென்றடைவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(11) இயைபான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் அனைத்தையும் பரிசோதனைக்குக் கிடைக்கச் செய்வித்தல் வேண்டும்.

(12) தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக மாதிரிகளைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் IV

### *உணவு கதிர் ஒளியூட்டலுக்கான அதிகாரமளிப்பும் மற்றும் சிறந்த கதிர் ஒளியூட்டல் நடைமுறைகளும்*

*11. (1)* கதிர் ஒளியூட்டப்படவுள்ள உணவுகள் தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அயனாக்கும் கதிர் வீச்சு மூலம் பதப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உணவுகள் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்டவாறானதாக இருத்தல் வேண்டும்.

(2)கதிர் ஒளியூட்டலின் மொத்த சராசரி அளவு 10 Me.V விடவும் கூடுதலாக இருந்தலாகாது.

(3) ஓர் அளவு வீச்சுக்குள் கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்படடவேண்டிய உணவுகளுக்கான தொழில்நுட்பத் தேவைப்பாடு உணவுக்கு உணவும் மற்றும் நோக்கத்திற்கு நோக்கமும் பொறுத்து வேறுபடும். கதிர் ஒளியூட்டலால் பதப்படுத்தப்படுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உணவுகளுக்கான குறைந்தபட்ச மற்றும் அதிகப்பட்சமான அளவு எல்லைகள் இவ் ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறானதாக இருக்கும். உள்ளுறிஞ்சப்படும் அளவு, தொழில்நுட்பவியல் தேவையின் அடிப்படையில், குறிப்பாக அது உணவுச் சுகாதாரத்துக்கான அல்லது தொற்றுத்தடைக் காப்பிற்கான நோக்கத்தை நிறைவேற்றுகின்றவிடத்து, குறைந்தபட்சம், உத்தேசிக்கப்பட்ட நோக்கத்தை எய்துவதற்குத் தேவையான ஆகக் குறைந்த அளவினதாக இருத்தல் வேண்டும். உள்ளுறிஞ்சப்படும் அளவு, உற்பத்திப்பொருள் இயற்கையான தரத்தைக் கொண்டிருப்பதனை உறுதிசெய்யக்கூடியவாறான அதிகபட்ச அளவொன்றை விடக் குறைவாயிருத்தல் வேண்டும்.

## பாகம் V

### *சுட்டுத் துண்டிடுதல்*

*12.* கதிர் ஒளியூட்டப்பட்ட ஓர் உணவு, 2005, சனவரி 19 ஆந் தேதிய 1376/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 இன் உணவு (சுட்டுத் துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க சுட்டுத் துண்டிடப்படுதல் வேண்டும்.

*13. (1)* கதிர் ஒளியூட்டப்பட்ட உணவுகளின் இறக்குமதி அல்லது ஏற்றுமதியின் விடயத்தில், கதிர் ஒளியூட்டப்பட்ட உணவுகள் முன்னரே பொதிசெய்யப்பட்டிருப்பினுஞ்சரி, அல்லாவிடனுஞ்சரி உணவு கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்திய பதிவு செய்யப்பட்ட கதிர் ஒளியூட்டும் வசதியினை இணங்காண்பதற்கான மிகச் சரியான தகவலையும் மற்றும் பதப்படுத்திய திகதியையும் அல்லது திகதிகளையும் தொகுதியை இனங்காண்பதற்கான எண்களையும் இயைபான கப்பலேற்றும் ஆவணங்கள் தருதல் வேண்டும்.

(2) (அ) கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்பட்ட உணவு முன்னரே பொதி செய்யப்பட்ட கொள்கலன்களிலேயே விற்பனைக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அயனாக்கும் கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட உணவொன்றின் சுட்டுத்துண்டு, உணவின் பொதுப் பெயருக்கு அருகாமையில் கீழே காட்டப்பட்டவாறான சர்வதேச உணவு கதிர் ஒளியூட்டல் அடையாளத்துடன் அத்தகைய பதப்படுத்துதலைச் சுட்டிக்காட்டும் எழுத்திலான கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) கதிர் ஒளியூட்டப்பட்ட உணவின் பொதிகள் அனைத்தும் பின்வரும் வெளிப்படுத்துகையும் இலச்சனையையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

| |
|---|
| .................................................................................................................. |
| (பெயர்) என்ற கதிர் ஒளியூட்டல் முறையினால் பதப்படுத்தப்பட்டது. |
| கதிர் ஒளியூட்டப்பட்ட திகதி.................................................................................... |
| உரிமத்தின் இல.:............................................................................................... |
| கதிர் ஒளியூட்டலுக்கான நோக்கம் :.......................................................................... |

(ஈ) கதிர் ஒளியூட்டப்பட்ட உற்பத்திப் பொருளொன்று வேறோர் உணவில் சேர்மானப் பொருளாகப் பயன்படுத்தப்படுமிடத்து, அத்தகைய உற்பத்திப் பொருளானது சேர்மானப் பொருள்களின் நிரலில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) கதிர் ஒளியூட்டலுக்குட்படுத்தப்பட்ட மூலப் பொருளொன்றிலிருந்து தனியான சேர்மான உற்பத்திப் பொருள் ஒன்று தயாரிக்கப்படுமிடத்து, அத்தகைய உற்பத்திப் பொருளின் சுட்டுத்துண்டு அத்தகைய பதப்படுத்தலைச் சுட்டிக்காட்டும் கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(3)* மொத்தக் கொள்கலன்களில் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் உணவுகளின் விடயத்தில், இயைபான கப்பலேற்றும் ஆவணங்கள், உள்ளடக்கமானவை கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்பட்டவை என்ற வெளிப்படுத்துகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(4)* நேரடியான நுகர்வுக்கெனக் கருதப்பட்ட பொதி செய்யப்படாத உணவின் விடயத்தில், உணவு கதிரொளியூட்டப்பட்டதென்ற தகவல் உணவுப் பொருளுக்கு அருகில் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### *மீள் கதிர் ஒளியூட்டல்*

*14. (1)* ஒருமுறை கதிரொளியூட்டப்பட்ட உணவுகள், தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் குறித்துரைத்து அனுமதிக்கப்பட்டாலன்றி, மீள் கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்படுதல் ஆகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்திற்காகப் பின்வரும் சந்தர்ப்பங்களில் உணவு மீள் கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் ஆகாது :-

(அ) குறைந்த அளவு மட்டத்தில், அதாவது ஏறக்குறைய 1KGY கதிர்வீச்சுக்குட்படுத்தப்பட்ட பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவானது வேறோர் தொழில்நுட்பவியல் நோக்கத்திற்காகக் கதிரொளியிட்டப்பட்டிருக்கு மிடத்து

(ஆ) ஐந்து சதவீதத்திற்கும் குறைவாகக் கதிரொளியூட்டப்பட்ட சேர்மானப் பொருளைக்கொண்ட உணவானது கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்பட்டவிடத்து ; அல்லது

(இ) உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டை எய்துவதற்கு தேவைப்படுத்தப்பட்ட அயனாக்கும் கதிர் வீச்சின் முழு அளவு வீதம் குறித்துரைக்கப்பட்டவொரு தொழில்நுட்பவியல் நோக்கத்திற்கெனப் பதப்படுத்துதலின் ஒரு பாகமாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் உணவுக்குப் பிரயோகிக்கப்படுமிடத்து.

*(3)* கதிர் ஒளியூட்டலுக்கு உட்படுத்தப்பட்ட உணவினால் உள்ளுறிஞ்சப்பட்ட திரண்ட மொத்தச் சராசரி அளவு வீதம் கதிரொளியூட்டப்பட்ட உணவுக்கெனக் கோடெக்ஸ் பொது நியமத்தால் விதந்துரைக்கப்பட்ட அளவு எல்லையை விஞ்சுதலாகாது.

## பாகம் VII

### *கதிரொளி ஊட்டப்பட்ட உணவின் இறக்குமதியும் ஏற்றுமதியும்*

15. கதிரொளி ஊட்டப்பட்ட உணவுகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பன இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், கப்பல் பொருள் மற்றும் ஆவணத்துடன் :-

(அ) தகுந்த சுட்டுத்துண்டிடல் ஆவணங்களும் ;

(ஆ) உணவு கதிரொளியூட்டும் நிறுவனம் முறையாக உரிமளிக்கப்பட்டுளள்ளதென்ற ஆவணங்களும் ;

(இ) நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரசபையிடமிருந்து பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது என்ற பயன்படப் பெறப்பட்ட சான்றிதழொன்றும் ;

இணைக்கப்படுதல் வேண்டும்.

16. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி-

"சட்டம்" என்பது 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம் என்று பொருள்படும் ;

"உணவு" என்பது சட்டத்தில் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"அயனாக்கும் கதிர் வீச்சு" என்பது எவையேனும் காமாக்கதிர்கள், X கதிர்கள் அல்லது கீழே தரப்பட்டவாறு அயன்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உற்பத்தி செய்யும் ஆற்றலுடைய சிறு துணிக்கைக் கதிர் வீச்சு என்று பொருள்படும் ;

(அ) கிளர்மின்நியூகிலைட் 60 Co அல்லது 137 Cs இலிருந்து வரும் காமாக் கதிர்கள் ;

(ஆ) 5 MeV இலான அல்லது அதற்குக் குறைந்த சக்தி மட்டமொன்றில் தொழிற்படும் இயந்திர மூலத்திலிருந்து பிறப்பிக்கப்படும் X கதிர்கள் ;

(இ) 10 MeV இலான அல்லது அதற்குக் குறைந்த சக்தி மட்டமொன்றில் தொழிற்படும் இயந்திர மூலத்திலிருந்து பிறப்பிக்கப்படும் இலத்திரன்கள் ;

"உணவு கதிரொளி ஊட்டும் வசதி" என்பது உணவு கதிர் ஒளியூட்டலுக்கான தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், உரிமமளிக்கப்பட்டதும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்டதுமானதொரு வசதி என்று பொருள்படும் ;

"உணவு கதிரொளியூட்டலுக்கான தகுதிவாய்ந்த தேசிய அதிகாரசபை" என்பது ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்பதாம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை அணுசக்தி அதிகாரசபை என்று பொருள்படும் ;

"கதிரொளி ஊட்டப்பட்ட உணவு" என்பது மேலே பாகம் I (ஆ) என்பதில் விவரிக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கென அயனாக்கும் கதிர் வீச்சினால் பதப்படுத்துதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் உணவு என்று பொருளாகும். இது அளவீட்டின் மற்றும் பரிசோதனையின் நோக்கங்களுக்காக கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட உணவுகளை உள்ளடக்கமாட்டாது ;

"அளவியல்" என்பது உணவினால் உள்ளுறிஞ்சப்பட்ட கதிர்வீச்சின் அளவை அளக்கும் முறை என்று பொருள்படும் ;

"மதியுரை சார்ந்த அளவு எல்லைகள்" என்பது வழமையான GMP யின் கீழ்ப் பதப்படுத்தலானது அதன் முன்னப்பட்ட நோக்கத்தை எய்துவதனையும் மற்றும் அத்தகைய பதப்படுத்துதலுக்கு உட்படுத்தப்பட்ட உணவின் இயற்கையான தரத்தைத் தக்கவைத்திருப்பதையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும் அதிகபட்ச அல்லது குறைந்தபட்ச அளவு வீதங்களாகும். (விதிவிலக்கான சூழ்நிலைகளில் ஏனைய அளவு வீத வரையறைகளுள் பயன்படுத்தப்படலாம். ஆயினும், முன்னப்பட்ட நோக்கமும் GMP யின் மட்டமும் எய்தப்படும் என்ற போதியளவு தகவலும் உறுதிப்படுத்துகையும் தரப்படுதல் வேண்டும்.) ;

"கதிர் ஒளியூட்டப்பட்ட உணவு" என்பது தனியாக அல்லது உணவின் அதே வகுப்பிற்குட்பட்ட உணவுப்பொருள் ஒவ்வொன்றினதும் ஏதேனும் தொகுதியொன்றின் ஒரு பாகமாக அயனாக்கும் கதிர் வீச்சுக்குட்படுத்தப்படுதல் மூலம் பதப்படுத்தப்பட்ட ஏதேனும் உணவு என்று பொருள்படும் ;

"கதிர் ஒளியூட்டலுக்கான உரிமம்" என்பது குறிப்பிட்டவொரு வகுப்பைச் சேர்ந்த உணவை அயனாக்கும் கதிர்வீச்சின் மூலம் பதப்படுத்துதலுக்குட்படுத்துவதற்கான ஓர் உரிமம் என்று பொருள்படும்.

## அட்டவணை I

**குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கதிர் ஒளியூட்டல் அளவுகள்** [ஒழுங்குவிதி 11(3)]

| நிரல் I | நிரல் II | நிரல் III | | |
|---|---|---|---|---|
| | | கதிரொளி ஊட்டலின் அளவு (KGY) | | |
| தொடர் இல. | உணவின் பெயர் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | மொத்தச் சராசரி |
| 1. | வெங்காயம் (பெரியது) | 0.03 | 0.09 | 0.06 |
| 2. | வாசனைத்திரவியம் | 2 | 10 | 6 |
| 3. | உருளைக்கிழங்கு | 0.06 | 0.15 | 0.10 |
| 4. | அரிசி | 0.25 | 1.0 | 0.62 |
| 5. | ரவை (ருலாங்) ஆட்டாமாவு, கோதுமை மாவு | 0.25 | 1.0 | 0.62 |
| 6. | மாம்பழம் | 0.25 | 0.75 | 0.50 |
| 7. | முந்திரி, அத்தி, உலர்ந்த பேரீச்சம் பழம் | 0.25 | 0.75 | 0.50 |
| 8. | இஞ்சி, ஈர வெங்காயம் | 0.03 | 0.15 | 0.09 |
| 9. | கோழியிறைச்சி உட்பட இறைச்சி மற்றும் இறைச்சி உற்பத்திப் பொருட்கள் | 2.5 | 4.0 | 3.25 |

12-78

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.